**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வத்திராயிருப்பு**

முன்னிலை : திரு. மூ.ராமநாதன், B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வத்திராயிருப்பு

**2026 ம் வருடம் ஜூன் மாதம் 09 ம் நாள் செவ்வாய்கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண். 261/2026**

**உள்**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.93/2026**

கருப்பணக்குமார்,

த/பெ. நடராஜன் ... மனுதாரர்/எதிரி

/எதிரிடை/

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்

வத்திராயிருப்பு காவல் நிலைய

குற்ற எண்.76/2025 ... எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V. செந்தில் அவர்கள் ஆஜராகியும் அரசு தரப்பில் கற்றறிருந்த அரசு வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

1. மனுதாரர்/எதிரி தரப்பில் பா.ந.சு.ச பிரிவு 480-ன் கீழ் பிணைகோரி பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் -**

இவ்வழக்கில் கடந்த 27.03.2025 ம் தேதி 13.00 மணிக்கு வத்திராயிருப்பு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மற்றும் போலீஸ் பார்டியினர் ரோந்து பணியிலிருந்தபோது, எதிரி வத்திராயிருப்பு அரசு மருத்துவமனை அருகில் வைத்து எவ்வித அரசு அனுமதியின்றி

அதிக லாபம் பெற வேண்டுமென்ற உள்நோக்கத்தில் டாஸ்மாக் லபிள் ஒட்டப்பட் 180 ML அளவுள்ள Old Chef Brandy லேபிள் ஒட்டப்பட்ட மதுபாட்டில்கள் 27 யை வெள்ளை நிற சாக்குப்பையில் விற்பனைக்காக தன் வசம் வைத்திருந்த குற்றத்திற்காக புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில், எதிரி மீது வத்திராயிருப்பு காவல் நிலைய குற்ற எண்.76/2025, பிரிவு 4(1)(c) TNP Act - ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**<u>3. மனுவின் சுருக்கம்:-</u>**

மேற்படி மனுவில் மனுதாரர்/எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்றும், இந்த வழக்கு மனுதாரர்/எதிரி மீது போடப்பட்ட பொய் வழக்கு எனவும், எதிரி சட்டத்தை மதித்து நடப்பவர் என்றும், தலைமறைவாகிவிட மாட்டார் எனவும், எதிரியை பிணையில் விடும் பட்சம் தகுந்த இரு ஜாமீன்தாரர்களை ஆஜர்படுத்த தயாராக உள்ளதாகவும், எனவே, மனுதாரர்/எதிரியை பிணையில் விடுமாறும் கோரியிருந்தார்.

**<u>4. அரசு தரப்பு எதிருரை</u>**

எதிரி கடந்த 05.06.2026 ம் தேதி பிடியாணையின் மூலம் கைது செய்யப்பட்டு சிறைவாசியாக இருந்து வருதாலும், எதிரிக்கு ஜாமீன் வழங்கும் பட்சத்தில் இதுபோன்ற குற்றச்செயலில் மீண்டும் ஈடுபடுவார் என்பதாலும், எதிரி நீதிமன்ற வழக்கின் விசாரணையின் போது ஆஜராக மாட்டார் என்றும், எனவே, எதிரியை பிணையில் விட கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

4. மனுதாரர் தரப்பில் பிணை வழங்கக்கோரி தாக்கல் செய்துள்ள இந்த பிணை மனுவை அனுமதிப்பதா வேண்டாமா என்பதே தீர்வு செய்ய வேண்டிய பிரச்சனை ஆகும்.

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

இவ்வழக்கின் எதிரிக்கு இந்நீதிமன்றத்தில் பிடியாணைப் பிறப்பிக்கப்பட்டு, பிடியாணையின் மூலமாக கடந்த 05.06.2026 ம் தேதி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்றும், எதிரி மீது வத்திராயிருப்பு காவல் நிலைய குற்ற எண்.76/2025, பிரிவு 4(1)(c) TNP Act - ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் எதிரி நீதிமன்ற வழக்கின் விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாமல் இருக்கும் நிலையில், எதிரியை பிணையில் விடும் பட்சத்தில் மீண்டும் இதே போன்ற குற்றச்செயல்களை செய்யக்கூடும் என்று குறிப்பிட்டுள்ள நிலையிலும், எதிரி தரப்பில், எதிரி இனிவரும் காலங்களில் தவறாமல் விசாரணைக்கு ஆஜராகுவதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும், இவ்வழக்கின் தன்மையையும், குற்றத்தின் தன்மையையும் மற்றும் இதர சூழ்நிலைகளையும் கருதி எதிரிக்கு நிபந்தனைகளுடன் பிணை வழங்கி இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

மனுதாரர்/எதிரி தனக்காகவும் இரண்டு ஜாமீன்தாரர்களுடன் சேர்ந்து தலா ரூ.10,000/-க்கு பிணை பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 09.06.2026 ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

RAMANATHAN MOORTHI

Digitally signed by RAMANATHAN MOORTHI

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர்

வத்திராயிருப்பு.